TAMIL - *"Lost"*


**வழி காட்டி**

**(THE GUIDE - "LOST")**

(தமிழ்)

# "இழந்து போனவன்"

(காணமற் போனவன்)



பசிவெறி கொண்டுள்ள மிருகங்களும், மரணத்தை விளைவிக்கக் கூடிய பாம்புகள் நிறைந்த பெரிய அடர்ந்த காட்டில் வழிதவறி தனித்து விடப்படுவது என்பது மிகவும் அச்சம் கொள்ளத் தக்க ஒன்றாகும். பாலைவனத்தில் தண்ணீரற்ற, சாலைகளற்ற, வழிகாட்டுவதற்கு ஒரு உதவியுமற்ற நிலையில் தனிதது விடப்படுவது என்பது மரணத்திற்கு நடத்தப்படுவதாகும். பரந்த ஆழ்கடலில் திசைகாட்டும் கருவியின்றி, உணவும் அருந்த குடிநீருமின்றி, பொறியியல் சக்தி ஏதுமின்றி வெப்பத்தினின்றோ, குளிரினின்றோ காக்கப்பட எவ்வித பாதுகாப்புமின்றி தனித்து விடப்படுவது என்பது அழிவை அடைவதாகும் பனிக்கட்டியும், பனிஉறைவும் மிகுந்த ஓர் உயர் மலையில் தனித்து விடப்படுவது என்பது மரணத்தின் நிச்சயமாகும். பாவம் நிறைந்ததும் புறக்கணிக்கப்பட்டதுமான ஒரு உலகத்தில் தனித்துவிடப்படுவது என்பது இவையெல்லாவற்றைக் காட்டிலும் அதிகக் கேடுள்ளதாகும். ஏனெனில், அது, ஆவிக்குரிய அழிவிற்கு. நித்திய மரணமும், நரகமுமாகிய நிலைக்கு அழைத்துச் செல்கிறது.

சங்கீதக்காரன் எழுதுகிறார், "காணமற் போன ஆட்டைப் போல் வழிதப்பிப் போனேன்". சங். 119.176. ஆடு மேய்க்கப் படவேண்டியதிருக்கிறது. இல்லாவிட்டால் கொடூரமான, சிங்கங்கள், கரடிகள், ஓநாய்கள் முதலிய கொடிய மிருகங்களுக்கு இறையாக நேரிடும். தாவீதைப் போன்று, சிங்கத்தையும் கரடியையும் கொல்லக்கூடிய மேய்ப்பர்கள் தேவை. தாவீது ஆடுகளுக்காக தன ஜீவனையும் கொடுக்க ஆயத்தமாயிருந்தான். நம்பிக்கைக்குரிய ஒரே ஒருவரும் நல்ல மேய்ப்பருமாகிய இயேசு நமக்கு தேவை. ஏனெனில் நமக்காக அவர் முன்னதாகவே தம்முடைய ஜீவனைக் கொடுத்துவிட்டார். நம்மை பசுமையான புல்லுள்ள மேய்ச்சலன்டைக்கும், தண்ணீரண்டைக்கும் நடத்துகிறார். இயேசு கூறினார் 'நானே நல்ல மேய்ப்பன். நான் என்னுடைய ஆடுகளை அறிந்தும், அவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்." ஆடுகளுக்கு மேய்ப்பனிருப்பது

மட்டும் போதாது. அந்த மேய்ப்பன் உண்மையான மேய்ப்பனாகவும் இருக்க வேண்டும். கர்த்தர் எரேமியாவிடம் இவ்வாறு கூறினார். ''அவர்களுடைய மேய்ப்பர்கள் அவர்களைச் சிதறப்பண்ணி, பர்வதங்களில் அலையவிட்டார்கள்''. எரே. *50:6, 7* சுய நீதிக்காரர்களாகிய மேய்ப்பர்களைப் பின்பற்று தீர்கள். குருடர்களுக்கு வழி காட்டுகிற குருடர்கள். இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே வந்த இயேசுவைப் பின்பற்றுங்கள். அவர் இழந்து போனதைத் தேடும் படியாகப் பின்செல்லுவார். அதைக்கண்டு பிடிக்கும் வரையிலும் அதைத் தேடுவார்.

பல்லாண்டுகளுக்கு முன் தென்மேற்கு ஆப்பிரிக்காவில் இரு வேட்டைக்காரர்களைச் சந்தித்தேன். ஒரு சமயத்தில் அவர்கள் கலகாரி பாலைவனத்தில் இழந்து போனவர்களாய்க் காணப்பட்டார்கள். இருபது கழுதைகளால் இழுக்கப்படுகின்ற ஒரு வண்டியில் பாலைவனத்தை நோக்கிப் பயணம் செய்தார்கள்.

கடைசி மலையில் தங்கள் தங்கள் மனைவி பிள்ளைகளுடனும் வந்து சேர்ந்த உடன் தங்களுடைய கூடாரங்களை அமைத்தார்கள். வேட்டையாடும் படியாக அவர்களில் இருவர் அங்கேயிருந்து புறப்பட்டார்கள். ஒரு நாள் ''ஆண்டிலோப்ஸ்'' என்ற மான் போன்ற பிராணிகளின் கூட்டம் சென்றுள்ள தடத்தைப் பின் தொடர்ந்து சென்ற பொழுது பாலைவனத்தில் மத்திய பாகத்திற்குள்ளாக்கப்பட்டு விட்டார்கள். மாலை வேளை நெருங்கிக் கொண்டிருந்தபொழுது, முதல் வேட்டைக்காரன் ஒரு இணை (ஜோடி) மிருகத்தைக் கண்டு அவைகளைச் சுட்டு வீழ்த்திவிட்டு அவருடைய தோழனைத் தேடினான். அவன் ஏமாற்றம் கொள்ளத்தக்கதாக இரண்டாவது வேட்டையாளன் திரும்பவில்லை. (அவன் தான் எதிர் பார்த்த பிராணியைத்தேடி நண்பனுக்குத் தெரியாமலேயே சென்றிருந்தான்) அவன் தான் கடந்து வந்த மணல்மேட்டை நோக்கி தன் நண்பனைத் தேடிவந்தும் காணமுடியவில்லை அவ்வாறு தேடிக்கொண்டிருக்கும் பொழுதே இருண்டுவிட்டபடியால் தன் வழியையும் கூட இழந்தான். தன்னுடைய கூடாரத்தின் நெருப்பின்மூலம் கண்டுகொள்வதற்காக நள்ளிரவில் முயன்றலைந்தும், முயற்சியாவும் வீணாயிற்று. அறுபத்து நான்கு மணிநேரமாக அலைந்து முழு பலத்தோடு தேடி, தவனமும், தாகமும் மூழ்கடிக்கும்வரை திரிந்து சக்தி இழந்தவனாய்ச் சோர்ந்தான். நா உள்ளிழுக்க வாயினின்று ரத்தம் சொட்ட ஆரம்பித்தது. அதிகம் வெப்ப மிகுந்த மணற்பாங்கான பாலைவனத்தில் முற்றிலும் கைவிடப்பட்டிருந்தான். கைவிடப்பட்டவனாக தாகத்தில் மரிக்கிறவனாக தனித்து விடப்பட்டிருந்தான். இறக்கும் தருவாயில் விழுந்தவனாக தேவனை உதவிக்காக கூவியழைத்தான். வெளிப்படுத்தப்படக்கூடிய வார்த்தைகளடங்கிய ஜெபத்தை ஏறெடுக்கக் கூடாத நிலையில் இருக்க, மனிதனுடைய இருதயத்தை ஆராய்ந்தறிகிற கர்த்தர் அவனுடைய இருதயத்தின் குமுறலைக் கேட்டார். உடன் தானே மரித்துக் கொண்டிருந்த அந்த வேட்டைக்காரன் தூரத்தில் ஒரு சிலுவையும், அச்சிலுவையிலிருந்து ''நான் தாகமாயிருக்கிறேன்'' என்ற உரத்த குரலையும் கேட்டான். அவன், அது இயேசு சிலுவையிலிருந்து உச்சரித்த கதறுதல் என அறிந்திருந்தான். அது, அவனுடைய சரீரத்திற்குள்ளாக ஜீவனைக் கொடுக்கும், உயிர்ப்பிக்கும் வல்லமையாகச் சென்றது அவனுடைய தாகம் நீங்கியது. தேவனுடைய குமாரனாகிய இயேசு கல்வாரி சிலுவையில் அவனுடைய இடத்தில் தாகமடைந்துவிட்டார் என்று உணர்ந்தான் அவனுடைய நாவிலிருந்து இரத்த ஒழுக்கு நின்றது. அவன் குணமானான்.

முற்றிலும் புதுப்பிக்கப்பட்டவனாய் எழுந்து நின்றான். எல்லாவிதமான களைப்பும், அலுப்பும் அவனைவிட்டு நீங்கியிருந்தது. தான் உயிர்ப்பிக்கப்படும் படியாகவும், புது உற்சாகம் கொள்ளும்படியாகவும் தன்னுடைய இடத்தில் தனக்காக சிலுவையில் தாகமடைந்தவரைத் துதித்து நன்றி செலுத்தினான். இவ்வளவு ஆச்சரியமானவிதமாக தன்னைச் சந்தித்ததற்காக முழு இருதயத்தோடு நன்றி செலுத்தினார். தன்னுடையவர்களைக் காணும்படி எவ்வழியில் செல்லுவது என்று ஆச்சரியத்துடன் பார்த்தான். தரையிலிருந்து நான்கு அடி உயரத்தில் மனித கரம் ஒரு விரலால் சுட்டிக் காட்டுவதைக் கண்டு அதிசயித்தான். அக்கரத்தினை நோக்கி முன் சென்று அது உண்மையாகவே மனிதகரம்தானா என்று பார்க்கச் சென்ற போது அது அவனுக்கு முன்னாக கடந்து வந்தது. ''இது தேவனுடைய கரம், இது தேவனுடைய விரல்'' என்று கூறிய வாறே அதைப் பின் தொடர்ந்து இருபது மணி நேரம் சென்றான். அவன் நகர்ந்த போதெல்லாம் அந்த கரமும் நகர்ந்தது. இறுதியாக குளிர்ந்த நீரூற்றண்டையில் அக்கரம் நின்று விட்டது. அவன் தாகம் தீரும்வரை தண்ணீர் அருந்தினான் அவன் நிமிர்ந்து பார்த்த போது அக்கரம் மறைந்து விட்டதையும், அவனுக்குப் பின்னாக சற்று தூரத்தில் மணல் மேட்டையும் அவனுடைய கூடாரக் கூடங்களையும் கண்டான்.

கூடாரத்தை அடைந்தபோது அவனுடைய ஜனங்கள் தேவனை நோக்கி அவனை மீண்டும் பத்திரமாக தங்களண்டை எந்தவித

ஆபத்துமில்லாமல் கொண்டுவர வேண்டுமென்று ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். மற்றுமொரு வேட்டைக்காரனும் ஜெபித்துக் கொண்டிருப்பதைக் கண்டான் அவனும் கூட தனித்து விடப்பட்டபோது குறிப்பிடத்தக்க ஒரு வழியில் குடும்பத்தாருடன் கர்த்தரால் கொண்டு வரப்பட்டிருந்தான். தவருன தடத்தைப் பின் பற்றிச் சென்ற போது பாலைவனத்தில் இரவு பகலாகக் கூடாரத்தைத் தேடியலைந்தது, வீணுக தனித்து விடப்பட்டிருந்தான். பொழுது புலர்ந்து கொண்டிருந்தபொழுது அவன் ஆச்சரியப்படும் விதமாக எட்டு வயது நிரம்பிய அவனுடைய மகன் அருகாமையிலிருந்த மணற் குன்றிலிருந்து தேடிக் கொண்டிருந்தான் இச் சிறுவன் எப்படி தனிமையாக இவ்வளவு தூரத்தையும் கடந்து வந்திருக்க முடியும் என்று ஆச்சரியமடைந்தான். அச்சிறுவனுடைய பாத அடையாளங்கள் காணப்படவில்லையெனினும், அவன் ஆறு மணற்குன்றுகளைக் கடந்து, மறு குன்றை நோக்கி நடந்திருந்தான் என்ற காட்சி தெளிவாயிருந்தது. ஏழாவது குன்றை அடைந்த வேளையில் கூடாரத்தைத் தெளிவாக அடையாளம் கண்டு கொள்ளக்கூடிய நிலையில் கை அசைத்து அழைக்கிறவனைக் காணப்பட்டான். விரைவில் நன்கு தூங்கிக்கொண்டிருந்த தன் மகனுக்குப் பின்னுகக் காணப்பட்டான். பின்பு அவன் தன்னைப் பாதுகாவலுக்குள் கொண்டு வரும்படி ஒரு காட்சியை தேவன் பயன்படுத்தியிருக்கிருர் என்று உணர்ந்தான்.

நாமெல்லாரும் இவ்வுலகக் காரியங்களைத் தேடி வேட்டையாடிக் கொண்டிருக்கிறவர்களாகக் காணப்படுகிறோமேயன்றி வேறல்ல. அதனுடைய செல்வத்தையும், புகழையும், ஆறுதலையும், பணத்தையும், இன்பங்களையும், வெற்றிகளையும் மற்றும் பல காரியங்களையுமே தேடுகிறோம் ஆகையாய் முதலாவது அவருடைய ராஜ்யத்தையும் நீதியையும் தேடுவதை விட்டுவிட்டோம் இவ்வுலகில் ஆவிக்குரிய பாலைவனத்தில் நாம் தனித்து விடப்பட்டவர்களாக இருக்கிறோம். ஜீவ தண்ணீரின் ஊற்ருகிய இயேசு நமக்கு வெளிப்படுத்தப்படும் வரை பரிதபிக்கப்பட்டவர்களாக இருக்கிறோம். ஜீவதண்ணீரின் ஊற்ருகிய இயேசு நமக்கு வெளிப்படுத்தப்படும் வரை பரிதபிக்கிறவர்களாய் கதறுகிறோம். நம்முடைய ஆத்துமா தேவன் மேல் தாகமாயிருக்கிறது. ஜீவனுள்ள தேவன் மேல் தாகமாயிருக்கிறது. இயேசு கூறினுர் "இழந்து போவதைத் தேடவும் இரட்சிக்கவுமே நான் வந்தேன்" என்று, காணுமற்போன ஆட்டைத் தான் கண்டு கொள்ளும் வரையிலும் தேடுகிருர். அவர் உன்னையும் என்னையும் தேடுகிருர். ஆடு எப்படி காணுமற் போகிறது? இவ்வுலகத்தின் பாவ சந்தோஷத்தை அவன் விரும்பினுன். எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிற பண ஆசையை உடையவனுக, தன் தகப்பனுக்கு நன்றி கெட்டவனுயிருந்தான். இவ்வுலகத்தின் அதிபதி அவன் கண்களைக் குருடாக்கிப் போட்டான். அவன் தன்னைக் காணக்கூடாதபடி படிப்படியாக பாவச் சேற்றுக்குள் மூழ்கடித்தான். தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருந்த அவனுடைய தகப்பனை விட்டுத் தேவனுக்குத் தூரமாகக் கொண்டு சென்று விட்டான். அவன் பன்றிகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது பசியால் வாடி பட்டினியால் துன்பப்பட்டபோது தன் அறிவீனத்தைக்குறித்து விழிப்படைந்தான். பன்றிகளை விட்டான். பொல்லாத எஜமானை, பன்றிகளின் தவிட்டைத்தின்று கூட தன் வயிற்றை நிரப்ப விடாதவனை விட்டுவிட்டுப் புறப்பட்டான். அவனுடைய தகப்பனிடத்தில் வந்தான் தகப்பனை நோக்கி "தகப்பனே பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன். இனி மேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்லன் என்று சொன்னுன்." லூக் 15 : 11-32 "நான் பாவஞ்செய்தேன்" அவனுடைய தகப்பன் அவனைத்தழுவி அழைத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்று "என்குமாரனுகிய இவன் மரித்தான் (ஆவிக்குரிய பிரகாரம்) திரும்பவும் உயிர்த்தான், காணுமற் போனுன் திரும்பவும் கண்டுபிடிக்கப்பட்டான் என்ருன்"

இயேசு கூறினுர் "அன்றியும் ஒரு ஸ்திரீ பத்து வெள்ளிக் காசை உடையவளாயிருந்து, அதில் ஒரு வெள்ளிக்காசு காணுமற் போனுல், விளக்கைக் கொளுத்தி, வீட்டைப் பெருக்கி, அதைக் கண்டு பிடிக்கிறவரைக்கும் ஜாக்கிரதையாய்த் தேடாமலிருப்பாளோ? கண்டுபிடித்த பின்பு தன் சிநேகிதிகளையும் அயல் வீட்டுக்காரிகளையும் கூட வரவழைத்து காணுமற்போன வெள்ளிக்காசைக் கண்டுபிடித்தேன், என்னேடு கூடச் சந்தோஷப்படுங்கள் என்பாள். கை நழுவிய வெள்ளிக்காசை யாரும் குற்றம் சாட்டமாட்டார்கள் யேசேப்பும் மரியாளும் இயேசுவை தேவாலயத்தில் தவறவிட்டு தேடிக் கண்டுபிடிக்குமட்டும் வரையிலும் மூன்று நாட்களாகத் தேடினுர்கள். கிறிஸ்து கண்ணேக்கமாயிருக்கிற அநேகமாயிரம் திருச்சபை மெய்யங்கத்தினர்கள் காணுமற்போயிருக்கிருர்கள். அவர்கள் அவரை உண்மையாகக் கண்டு கொள்ளவே இல்லை. ஆண்டவராகிய இயேசுவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு இன்னும் பரிசுத்த ஆவியினுலும், வார்த்தையினுலும் மறுபடியும் பிறக்கவில்லை. தேவனுடைய ராஜ்யத்தைப் பொறுத்த அளவில் அவர்கள் காணுமற் போனுர்கள் ஆகையால் இயேசு "மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்றும்

கூறினர். "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க மாட்டான்." என்றும் கூறினர். இயேசு இன்றும் இழந்து போனதைத் தேடிக் கொண்டிருக்கிறார் என்பதை நினைத்துக் கொள்ளுங்கள். அவர் உன்னைத் தேடுகிறார். நீ அவரைத் தேடுவாயானால் உன்னுடைய வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான சந்திப்பை பெறுவாய். ஒரு வேளை உனது சமாதானத்தை இழந்திருக்கலாம். உனது பரிசுத்தத்தை, உன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்ட மகிழ்ச்சியை, தேவனுக்குச் சாட்சியமாயிருப்பதை இழந்திருக்கலாம். இயேசுவில் நீ இழந்தவைகளைக் கண்டு கொள்ளும் வரையிலும் தேடிக்கொண்டிரு. ஒரு வேளை உன் சுகத்தை இழந்திருக்கலாம்; உன் அந்தஸ்து, உன் வேலை, உன் வருமானம் அல்லது உன் செல்வத்தை இழந்திருக்கலாம். உன்னுடைய இன்னல்களை, உன் இருதயத்தின் வேதனைகளை, உன்னுடைய காரியங்கள் எதுவானாலும் தீர்த்து சரிசெய்ய வல்லவராகிய ஆண்டவரிடத்தில் கொண்டு வா. ஆனால் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக்கொள் "தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான் கிறிஸ்துவினிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான்." இந்த உலக முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு பிரயோஜனம் ஒன்றுமில்லை.

நாம் யாவரும் பாகுபாடில்லாமல் நம்முடைய பாவங்களில் மரித்தவர்களானோம். "நம்மில் பாவமில்லை என்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். சத்தியம் நமக்குள் இராது. நாம் பாவஞ் செய்யவில்லையென்போமானால் நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம். 1 யோ. 1:8,10.

நம்மில் ஒருவராவது இழந்து போனவர்களாகக் காணப்பட வேண்டியதில்லை. ஏனெனில் "இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்". லூக். *19:10* கர்த்தர் உன் சமீபமாயிருக்கிறார். நீ தேடுவாயானால் கண்டுகொள்வாய் இப்பொழுதே நீ அவரைத்தேட வேண்டும். "கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள். அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்". ஏசாயா 55:6. முழு நிச்சயமான ஒரு காரியமென்னவென்றால், அது தேடும் இரட்சகரும், தேடும் பாவியும் ஒருவரையொருவர் எப்பொழுதும் சந்திப்பார்கள் என்பதே. "தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்" மத். 7:7. நீ அவரைத் தேடிக் கண்டு கொண்டு உன் வாழ்க்கையைச் சமர்ப்பிப்பாயானால் நீயும், உன் எதிர்காலமும், அவருடைய கரத்திலிருக்கும். அப்பொழுது. ஆடுகளின் நல்ல மேய்ப்பன் உன்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, நித்திய ஜீவனுக்குள் நடத்துவார்.

இழந்தவனாகக் காணப்படுகிற சகோதரனே! அவரை நோக்கிக் கூப்பிடு. தயங்காதே. "அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவன் எவனோ, அவன் இரட்சிக்கப்படுவான்". அப். 2:21.

## வெளியே வா. (Come out)

பாவத்தின் ஆளுகையை விட்டு வெளியே வா. சாத்தானின் ஆளுகையை விட்டுப் புறப்பட்டு வெளியே வா. இயேசு, இராஜாதிராஜாவும், தேவாதி தேவனுமாயிருக்கிறார். இருளின் ஆட்சியை ஒழித்து, ஒளியின் இராஜாவாகிய இயேசு, சமாதான பிரபு வெற்றி சிறந்தார். பாவத்தின் அடிமைத்தனத்தினின்றும் வெளியே வா. இயேசு உன்னை விடுதலையாக்க வந்திருக்கிறார். இரட்சிப்பின் கிரயத்தை கல்வாரி சிலுவை மரத்தில் அவர் செலுத்திவிட்டார். உன்னை விடுவிக்கும்படியாகவே அவர் மரித்தார்.

பயத்தின் அடிமைத்தனத்திலிருந்தும், மரணத்தின் பயத்தினின்றும் உன் வாழ்நாளெல்லாம் மரணபயத்தில் உன்னைப் பிடித்து வைத்திருக்கும் சாத்தானை இயேசு, வெற்றிகொண்டு. பாவத்தையும், மரணத்தையும் பரிகரித்து விட்டார். அவைகளை வெளியரங்கமான காட்சியாக்கி எனக்காகவும், உனக்காகவும் மரணத்தின் ஆளுகைக்குட்பட்டு மரணத்தையும் ஜெயமாக விழுங்கினர். என்றென்றும் ஜீவிக்கும்படியாகக் கல்லறையிலிருந்து எழும்பினர் அவர் வாழ்கிறபடியால் நாமும் வாழ்கிறோம். நாம் அவரோடு கூட உலகத்திற்கு சிலுவையிலறையப் பட்டிருக்கிறோம். பாவத்திற்கும், சுயத்திற்கும் நம்முடைய இடத்தில் சிலுவையிலறையுண்டு மரித்த இயேசு விற்குள்ளாக மரித்திருக்கிறோம். நாம் நீதிமான்களாகத் தீர்க்கப்படும்படி அவர் மூலமாய் நித்திய ஜீவனை உடையவர்களாகிறோம்.

சாத்தான், ஒரு காலத்தில் பாதுகாக்கும் தூதனாக இவ்வுலகத்தைப் பாதுகாக்கும் தூதனாயிருந்து தன்னை தேவனுக்கு மேலாக உயர்த்தி இவ்வாறு கூறினன். 'நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன். உன்னதமானவருக்கு ஒப்பாவேன்" என்றான் "ஆனாலும் நீ அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டு போனாய்". ஏசா. 14:12-16.

பிசாசாகிய பிதா இவ்வுலகத்தின் அதிபதி இயேசுவால் ஜெயம் கொள்ளப்பட்டான் தங்கள் சுய சித்தத்தினாலே தங்களைத் தாங்களே அவனுக்கு ஒப்புக் கொடுத்தாலொழிய அவர்களை அவன் அடிமைகளாக ஆளமுடியாது

தேவன் நம்மை பாவத்தினின்றும் சாத்தானின் ஆளுகையினின்றும் வெளியே புறப்பட்டு வரும்படி கூறுகிறார். அனைவருக்கும் இராஜாவாகவும், பொது மக்களை ஆளுகிறவராகவும் தேவன் இயேசுவை நியமித்திருக்கிறார். "ஆனபடியால் நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்து போய் அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்." 2 கொரி 6:17.

For **free** Gospel literature, books and tracts in over 540 languages, write to:

E-MAIL: info@angp.co.za
**ALL NATIONS GOSPEL PUBLISHERS**
**P.O. Box 2191, PRETORIA, 0001, R.S.A.**
(A Gospel Literature Mission financed by donations)
(Reg. No. 1961/001798/08)